செ.வெ.எண்.519 நாள்: 02.09.2023

## பத்திரிக்கைச் செய்தி

## பட்டதாரி ஆசிரியர்/இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிடத்தில் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் நியமனம் செய்தல்.

நீலகிரி மாவட்டத்தில், பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படும் **அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட மேல்நிலை/உயர்நிலை/நடுநிலை மற்றும் தொடக்கப்பள்ளிகளில் கல்வி** பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்பிட சிறிது காலம் ஆகக்கூடும் என்பதால் மாணாக்கர்களின் கற்றல் கற்பித்தல் மற்றும் பொதுத்தேர்வு எழுதும் வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி அவர்களை பொதுத்தேர்வு எழுதுவதற்கு தயார் செய்வதற்கு ஏதுவாக தற்போது உள்ள காலிப்பணியிடங்களில் தற்காலிகமாக இடைநிலை ஆசிரியருக்கு ரூ.12,000/- பட்டதாரி ஆசிரியருக்கு ரூ.15000/- மாதத் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்திட ஆணை வரப்பெற்றுள்ளது. தற்போது இம்மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு தேர்வு வாரியம் / பதவி உயர்வு மூலம் நிரப்பிடும் வரை அல்லது இக்கல்வியாண்டு எது முன்னரோ அது வரையில் ஆசிரியர் பணிக்கு தகுதி பெற்ற பணி நாடு நர்களை பள்ளி மேலாண்மைக்குழு மூலம் தெரிவு செய்யப்படும். இப்பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது.

**கீழ்க்கண்டவாறு முன்னுரிமை வழங்கப்படும் :-**

1. பழங்குடியினர் இனத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. பழங்குடியினர் இனத்தவர் இல்லாத நிலையில் ஆதிதிராவிடருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. பள்ளி அமைந்துள்ள பகுதி மற்றும் அதன் அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. பள்ளி அமைந்துள்ள எல்லைக்குள் வசிப்பவர்கள்.
5. பள்ளி அமை விட ஒன்றிய எல்லைக்குள் வசிப்பவர்கள்.
6. மாவட்ட எல்லைக்குள் வசிப்பவர்கள்.

**கல்வித்தகுதி/வயது :-**

ஆசிரியர் தகுதித் தேர்வில் (TET) தேர்ச்சி பெற்று இல்லம் தேடிக் கல்வி திட்டத்தில் தன்னார்வலர்களாக பணிபுரிந்து வருபவர்கள்.

**விண்ணப்பிக்கும் முறை :-**

பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் பிரிவை சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து எழுத்து மூலமான விண்ணப்பங்கள் நேரடியாகவோ/அஞ்சல் மூலமாகவோ உரியகல்வித்தகுதி சான்றுகளுடன் பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடை நிலைஆசிரியர் பணியிடம் காலியாக உள்ள பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு மூலம் பரிந்துரை பெற்று மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில், **06.09.2023க்குள் சமர்பிக்கப்பட வேண்டும்** என மாவட்ட ஆட்சியர் (பொ)/ மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி அவர்கள் தெரிவித்துள்ளார்.

**இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிட விவரங்கள்:-**

அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி, குஞ்சப்பனை 1 மற்றும் கல்லம்பாளையம் 1 ஆக மொத்தம் 2 இடைநிலைஆசிரியர் காலிப்பணியிடம்.

**பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிட விவரங்கள்:-**

1. அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி,
   கப்பாலா - 01 - கணிதம்
2. அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடநடுநிலைப்பள்ளி,
   அல்லிமாயார் - 01 - அறிவியல்
3. அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளி,
   பொக்காபுரம் - 01 - ஆங்கிலம்.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.**

NilgirisPRO ProNilgiris NilgirisPRO